# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.160/2023</u>

2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 09ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். முதல்தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1, பிரியம் மருத்துவமனை வழங்கிய விபத்து பதிவேடு நகல் ம.சா.ஆ.2, 13.01.2023 முதல் 23.01.2023 வரை சிகிச்சை பெற்றதை காட்டக்கூடிய பிரியம் மருத்துவமனை வழங்கிய விடுப்பு சான்று அசல் ம.சா.ஆ.3, 13.03.2023 முதல் 18.03.2023 வரை சிகிச்சை பெற்றதை காட்டக்கூடிய பிரியம் மருத்துவமனை வழங்கிய விடுப்பு சான்று அசல் ம.சா.ஆ.4, பிரியம் மருத்துவமனை காயச்சான்று நகல் ம.சா.ஆ.5, மருத்துவபில்கள் ம.சா.ஆ.6 (எதிர்மனுதாரர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) எனது சிங்கப்பூர் S Pass அடையாள அட்டை நகல்கள் ம.சா.ஆ.7 வரிசை (எண்ணம். 2) என்னுடைய கடவுசீட்டுகள் அசல் மற்றும் நகல் ம.சா.ஆ.8 வரிசை (எண்ணம் - 3, நடப்பு கடவுசீட்டு நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது) , நான் சிங்கப்பூரில் ஓட்டுநர் வேலைசெய்ததை காட்டக்கூடிய சிங்கப்பூர் வாகன ஓட்டுநர் உரிமங்கள் ம.சா.ஆ.9 வரிசை (எண்ணம் - 2), நான் சிங்கப்பூர் வேலை செய்ததற்கு மாதம் SDG 3000

வழங்கப்பட்டதற்கான ரசீதுகள் ம.சா.ஆ.10 வரிசை (எண்ணம் 3) (எதிர்மனுதாரர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) 2023ம் ஆண்டு சிங்கப்பூர் டாலர் மதிப்பை காட்டக்கூடிய இணையதள நகல் பதிவிறக்கம் செய்யப்பட்டது. ம.சா.ஆ.11, எனது இந்திய வாகன ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.12, 1ம் எதிர்மனுதாரர் வாகன பதிவு புத்தகம் நகல் ம.சா.ஆ.13, 1ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு சான்று நகல் ம.சா.ஆ.14, 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.15,

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:

விபத்து நடந்த இடம் 4 ரோடுகள் சந்திக்கும் இடம் என்றால் சரிதான். நான் ஓட்டிசென்ற மோட்டார் சைக்கிள் எனக்கு சொந்தமானதாகும். அந்த சாலை துறையூர் – பெரம்பலூர் சாலையென்றும், சாலையின் நடுவில் தடுப்புசுவர் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய ஊர் அந்த ரோட்டிற்கு தென்புறத்தில் உள்ளது. நான் வடக்கிலிருந்து ரோட்டை கடந்து தெற்கே செல்வதற்காக வந்துகொண்டிருந்தேன். கார் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்தது. விபத்து சமயத்தில் அங்கு விளக்குகள் கிடையாது என்றால் சரியல்ல. விபத்து 4ரோடுகள் சந்திப்பின் நடுப்பகுதியில் நடந்தது என்றால் சரியல்ல. என்னுடைய மோட்டார் சைக்கிள் காரின் வலதுபக்கமான டிரைவர் சீட்டுப்பக்கம் மோதியது என்றால் சரியல்ல. அந்த காரின் வலது பக்கம்தான் முழுதும் சேதம்என்றும் நான் தான் கவனிக்காமல் காரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. அந்த சாலை போக்குவரத்து அதிகமுள்ள சாலை என்றால் சரிதான். பிரதான சாலையில் வேகத்தடை இல்லை என்றால் சரிதான். நான் மேற்கிலிருந்து வாகனங்கள் வருகிறதா என்று மட்டும் கவனித்துவிட்டு கிழக்குபக்கம் கவனிக்காமல் மோட்டர் சைக்கிள் ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. அன்று நான் பொங்கல் சாமான்களை வாங்கிகொண்டு திரும்பி வந்துகொண்டுஇருந்தேன். நான் மோட்டார் சைக்கிளின் முன்புறம் சாமான்களை வைத்துக்கொண்டு ஓட்டிவந்ததால் என்னுடைய வாகனத்தை கட்டுப்படுத்த முடியவில்லை என்றால் சரியல்ல. கார் ஓட்டுநர் சரியான

வேகத்தில் தான் வந்தார் என்றும், நான் தான் அதை கவனிக்காமல் கவனக்குறைவாக ஓட்டி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் சிங்கப்பூரில் இருந்து தற்போது 03.10.2025ம் தேதி இந்தியா வந்தேன் என்றால் சரிதான். விபத்திற்கு பின்பு தொடர்சியாக நான் சுமார் 2 வருடங்கள் சிங்கப்பூரில் இருந்தேன் என்றால் சரிதான். இடையில் ஊருக்கு வந்துவிட்டு சென்றேன். நான் ஏற்கனவே விபத்துக்கு முன்பு பார்த்து வந்துவேலையை தான் தற்போது செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது பார்க்கும் வேலை மற்றும் அந்த வருமானத்தை காட்டக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் நான் மீண்டும் சிங்கப்பூர் செல்வதற்கு அப்போது விசா இருந்தது என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல. S Pass எப்போது வரை செல்லும் என்ற விவரம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்து 10 மாதங்கள் கழித்து நான் சிங்கப்பூர் சென்றேன். நான் அதன்பின்பு புதிய விசாவில் சென்றதால் இடைப்பட்ட காலத்தில் எனக்கு வருமான இழப்பு கிடையாது என்றால் சரியல்ல. மருத்துவமனையில் இருந்து நான் முழுமையாக குணமடைந்துவிட்டேன் என்று விடுவித்தார்கள் என்றால் சரியல்ல. மீண்டும் சிங்கப்பூர் செல்லும்போது நான் Medical Fitness வாங்கிகொண்டு சென்றேன் என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு எந்தவிதமான வருமான இழப்போ, உடல் ஊனம் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. விபத்திற்கு நான் காரணம் என்பதால் நான்கோரியுள்ள நஷ்டஈடு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>:

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.